218616

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60

தபாற் செலவு : சதம் 75

218616

# 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் (திருத்தச்) சட்டம்

ජාතික ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව
රෙජිස්ට්‍රාර් කාර්යාලය
1989 - 8 - 8
ශ්‍රී ලංකා SRI LANKA இலங்கை

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 16/86

பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்கப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:— 88 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரின் நியமனமும் அவரின் தத்துவங்களும்.

4. (1) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உதவிபுரிவதற்கென பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் அல்லது பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படலாம்.

(2) பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் எவரேனும் நியமனமானது, அவர் அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பது இலங்கை முழுவதற்குமா அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கா என்பதைக் குறித்துரைத்தல் வேண்டும். (எவ்விடப் பரப்புக்கு அத்தகைய பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்படுகின்றரோ அவ்விடப்பரப்பானது இதனகத்துப்பின்னர் "அவரது நியமன இடப்பரப்பு" எனக் குறிப்பிடு செய்யப்படும்).

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் எவரும், பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைய, பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரின் கடமைகளிலெதனையும், நிறைவேற்றவும் அவரின் தத்துவங்களிலெதனையும் பிரயோகிக்கவும் தகுதி வாய்ந்தவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவர், பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்குள்ள அதே சிறப்புரிமைகளையுடையவராதல் வேண்டுமென்பதுடன் அவருக்குள்ள அதே பொறுப்புக்களுக்கு அமைந்தவராதலும் வேண்டும்.

(4) இக்கட்டளைச் சட்டத்தின் நிருவாகத்தில் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது எவரேனும் பிரதிப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு

உதவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய சட்ட அலுவலர்களும் வேறு பணியாட்டொகுதியினரும் நியமிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"தொழில் புரிவதற்காக இலங்கைக்கு வெளியே செல்லும் இலங்கையர் எவரும், அவர் இறக்க நேரிட்டால் நட்டஈடு கொடுக்கப்படவேண்டிய ஆட்களைப் பெயர் குறித்து நியமித்தல்.

10அ. (1) தொழில் புரிவதற்காக இலங்கைக்கு வெளியே செல்கின்ற இலங்கைப் பிரசை எவரும், அப்படித் தொழில் புரியும்பொழுது அவர் இறக்க நேரிட்டால், எவ்வாட்களுக்கு நட்டஈடானது கொடுக்கப்படற்பாலதானதோ அவ்வாட்களின் பெயர்களை பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் பதிவு செய்துகொள்ளலாம்.

(2) இலங்கைக்கு வெளியே தொழில் புரியும்பொழுது இலங்கைப் பிரசையொருவர் இறக்கின்றவிடத்து, அத்தகைய இறப்புத் தொடர்பாக நட்டஈடாகக் கொடுபடற்பாலதான பணத்தொகையெதையும், அதற்கு உரித்துடைய ஆட்களுக்குப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரினால் கொடுக்கப்படுவதற்கென இறந்தவரின் தொழில்தருநர் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அனுப்பலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் பணத்தொகையெதனையும் பெற்றுக் கொண்டதன்மேல் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரானவர், இறந்தவரினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களுக்குப் பகிர்ந்தளிக்கலாம், அல்லது அத்தகைய பெயர் குறித்த நியமனம் இல்லாதவிடத்து, அதற்கு உரித்துடைய ஆட்களுக்குப் பகிர்ந்தளிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25அ, 25ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 25அ, 25ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்;

"ஆதனத்தைப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் தற்போதைக்கான உடைமையில் வைத்திருப்பதை வழங்குவதற்கான விண்ணப்பம்.

25அ. (1) இறந்த ஆளின் மரணச்சொத்து தொடர்பிலான மரணசாதனத் தத்துவப் பத்திரத்திற்கு அல்லது நிருவாகத் தத்துவப் பத்திரத்துக்கெனப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் விண்ணப்பமொன்றைச் செய்கின்றவிடத்து, மரணச் சொத்தின் அசைவுள்ள அத்துடன் அசைவற்ற ஆதனத்தைத் தற்போதைக்கான உடைமையில் எடுப்பதற்கென அவருக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றுக்காக, அவர் அதே நேரத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம் ("இது தற்போதைக்கான உடைமைக் கட்டளை" என இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும்).

(2) அம்மரணச் சொத்து தொடர்பில் மரணசாதனத் தத்துவப் பத்திரம் அல்லது நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கலுக்காகப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் முற்றிலாக் கட்டளையொன்றை தற்போதைக்கான உடைமைக்கான கட்டளையொன்றை நீதிமன்றமானது பதியும் கட்டத்தில், மரணச் சொத்தொன்றினது தற்போதைக்கான உடைமைக்கான கட்டளையொன்றை அது ஆக்கலாம். ஏதேனும் கட்டத்தில் நீதிமன்றமானது அத்தகைய முற்றிலாக் கட்டளையை இல்லாதொழித்தால், அது தற்போதைக்கான உடைமைக்கான கட்டளையையும் இல்லாதாக்கல் வேண்டும்.".

(3) தற்போதைக்கான உடைமைக்கான கட்டளையொன்றன் பயனைக்கொண்டு, இறந்த ஆளொருவரின் மரணச்சொத்தின் அசைவுள்ள அத்துடன் அசைவற்ற ஆதனத்தைப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் உடைமைக்கெடுக்கின்றவிடத்து, அவர், அத்தகைய ஆதனத்தை மரணச்சொத்தின் பின்னுரிமையானவருக்கென நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

கட்டுக்காவல் நம்பிக்கைப் பொறுப்பாளராக வழக்குத் தொடுப்பதற்கு பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் தத்துவங்களைப் பிரயோகித்தல்.

25ஆ. (1) எந்நம்பிக்கைப் பொறுப்புக்குப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டுக்காவல் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரோ, அந்த ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பாளர், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள முகாமைத்துவத் தத்துவங்களை அல்லது வேறேதேனும் தற்றுணிபுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் நம்பிக்கைத் துரோகமொன்று புரிந்துவிட்டார் எனப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் நம்புவதற்குக் காரணம் இருக்குமிடத்து, எம்மாவட்ட நீதிமன்றத்தினது குடியியல் நியாயாதிக்க உள்ளூர் எல்லைகளுக்குள், நம்பிக்கைப் பொறுப்பினது விடயப்பொருள் முழுவதும் அல்லது அதனது ஏதேனும் பாகம் வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது அமைந்திருக்கின்றதோ, அம் மாவட்ட நீதிமன்றத்தில்—

(அ) நம்பிக்கைப் பொறுப்பாளர் எவரும் அகற்றப்படுவதைப் பணிக்கின்ற;

(ஆ) கணக்குகள், விசாரணைகள் பற்றிப் பணிக்கின்ற;

(இ) நம்பிக்கைப் பொறுப்பு ஆதனத்தின் அல்லது அதன்கண் உள்ள அக்கறையின் எவ்விகிதம் நம்பிக்கைப் பொறுப்பின் குறிப்பிடப்பட்ட குறிக்கோளெதற்கும் குறித்தொதுக்கப்பட வேண்டுமென வெளிப்படுத்துகின்றது;

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பு ஆதனம் முழுவதையும் அல்லது அதன் பாகம் எதனேயும் குத்தகைக்குக் கொடுப்பதற்கு, விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு அல்லது கொடுத்துமாற்றுவதற்கு அதிகாரமளிக்கின்ற;

(உ) நம்பிக்கைப் பொறுப்பில் முகாமைக்காகக் கருத்திட்டமொன்றை உருவாக்குகின்ற;

(ஊ) எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளரால் குறித்துரைக்கப்பட்ட செயலெதுவும் புரியப்படுதலைப் பணிக்கின்ற;

(எ) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரை ஏக நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கின்ற; அத்துடன்

(ஏ) விடயத்தின் தன்மை தேவைப்படுத்தக்கூடியவாறுன அத்தகைய வேறு அல்லது மேலதிக நிவாரணத்தை வழங்குகின்ற

தீர்வையொன்றைப் பெறுவதற்கு அவர் வழக்கொன்றைத் தொடுக்கலாம்.'.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கோயில் ஆதனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராயிருத்தல்.

49. (1) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர்—

(அ) கோயில் ஒன்றின் நலனுக்காக அசைவுள்ள ஆதனத்தை நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கலாம். அத்தகைய ஆதனம் எதனிலும் இருந்து பெறப்படுகின்ற வருமானமானது, கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கிணங்க, அக்கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது கட்டுப்படுத்தும் விஹாராதிபதிக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்;

(ஆ) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரினுலும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரினுலும் அல்லது கட்டுப்படுத்தும் விஹாராதிபதியினுலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறுன அத்தகைய நியதிகளையும் நிபந்தனைகளையும் கொண்டுள்ள ஒப்பந்தத்தின்மீது பரப்பளவில் இருபது ஏக்கருக்கு அல்லது அதற்கு மேற்படவுள்ள அசைவற்ற ஆதனமாகவிருக்கும் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது கோயில் ஒன்றினைக்

கட்டுப்படுத்தும் விஹாராதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனம் எதையும் முகாமை செய்யலாம்.

(2) இப்பிரிவில், "நம்பிக்கைப் பொறுப்பாளர்", "கட்டுப்படுத்தும் விஹாராதிபதி", அத்துடன் "கோயில்" என்ற சொல்லமைப்புக்கள், பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அமைச்சரால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவை திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஐ) விதிகள், விதித்துரைக்கப்பட வேண்டுமென இக்கட்டளைச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள்.".